பக்கங்கள் 14+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | தை 30 புதன்கிழமை 12.02.2025 | அதிர்வு 195



‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# முட்டிப் பார்த்த பொலிஸார் எட்டி உதைத்த தமிழ் மக்கள்

# விகாரைக்கு எதிராக தையிட்டி மண்ணில் பெரும் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் - தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள சட்ட விரோத விகாரையை அகற்றிப் பொதுமக்களின் காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி மாபெரும் போராட்டம் இன்று முன்னெடுக்கப்பட்டது.

பல்வேறு அச்சுறுத்தல்கள், கெடுபிடிகள், எதிர்ப்புக்களுக்கு மத்தியில் இந்த விகாரைக்கு எதிராக நேற்று மாலை முதல் ஆரம்பமாகிய போராட்டம், இரண்டாவது நாளாக இன்று மாபெரும் போராட்டமாக இடம் பெற்றது.

விகாரைக்கு முன்பாகப் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களும், சிவில் அமைப்புக்களின் உறுப்பினர்களும், பொது மக்களும் எனப் பல நூற்றுக் கணக்கானோர் இன்று காலை முதல் ஒன்று திரண்டிருந்தனர்.

03▶





# முன்னாள் எம்.பி. திலீபன் இந்தியாவில் கைது!



(வவுனியா நிருபர்)

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கையில் இருந்து இந்தியாவின் மதுரைக்குச் சென்ற திலீபன், அங்கிருந்து பிறிதொரு கடவுச்சீட்டில் வெளிநாடு செல்ல முற்பட்ட நிலையில் இந்தியாவின் கேரளாவின் கொச்சி என்ற இடத்தில் வைத்து தமிழகப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் இந்தியாவின் புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# அர்ச்சுனா எம்.பி. தாக்கியதில் ஒருவர் போதனாவில் அனுமதி

## உயிருக்கு அச்சுறுத்தல் என அர்ச்சுனா எம்.பி. பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் தனியார் விருந்தினர் விடுதியில் நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவின் தாக்குதலுக்குள்ளான நிலையில் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் அர்ச்சுனா எம்பி மற்றும் சட்டத்தரணி கௌசல்யா ஆகிய இருவரும் நேற்று இரவு உணவருந்தச் சென்றுள்ளனர்.

அங்கு ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த இலங்கையர் ஒருவருக்கும் சாரதி ஒருவருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டை அர்ச்சுனா எம்.பி. வீடியோ எடுத்துள்ளார்.

இதன்போது ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த இலங்கையர், "சட்டத்தரணி மற்றும் வைத்தியராக நீங்கள் இருவரும் இருந்துகொண்டு அனுமதியின்றி பிறரை வீடியோ எடுக்கலாமா?" - எனக் கேட்ட நிலையில், தொடர்ந்து அர்ச்சுனா எம்.பி. அங்கு நின்ற சாரதியை வீடியோ எடுத்துள்ளார்.



இந்நிலையில் அவரது தொலைபேசி பறிக்கப்பட்டு எறிந்த நிலையில் அர்ச்சுனா எம்.பி. அந்தச் சாரதி மீது கிளாஸால் தாக்கியுள்ளார்.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், காயப்பட்ட நபரை யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர்.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத் தலைமையகப் பொறுப்பதிகாரியைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, அர்ச்சுனா எம்.பியின் தாக்குதலுக்கு உள்ளான நிலையில் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுளார். அதேவேளை, தனக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து அர்ச்சுனா எம்.பி. பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார். பொலிஸ் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன." - என்றார்.

# விகாரைக்கு எதிராக தையிட்டி மண்ணில் பெரும் போராட்டம்

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

இந்தப் போராட்டம் நடைபெறும் இடத்தில் பெருமளவிலான பொலிஸார் குவிக்கப்பட்டு, தடைகள் போடப்பட்டு புலனாய்வாளர்களின் கண்காணிப்பும் தீவிரமாக இருந்தது.

இவ்வாறான பல்வேறு அச்சுறுத்தல்கள், கெடுபிடிகள், எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் கறுப்புக்கொடிகளுடன் பெருமளவில் திரண்ட தமிழ் மக்கள் பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறிப்பாக, "அகற்று அகற்று சட்ட விரோத விகாரையை அகற்று, வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம், இனப்படுகொலை இராணுவமே வெளியேறு, இந்த மண் எங்களின் சொந்த மண், எமது நிலம் எமக்கு வேண்டும்" உள்ளிட்ட பல்வேறு கோஷங்களைப் போராட்டக்காரர்கள் எழுப்பினர்.

இதன்போது பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் பொலிஸார் செயற்பட்டதால் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே வாக்குவாதங்கள் ஏற்பட்டதால் முறுகல் நிலை ஏற்பட்டு பதற்றமான நிலைமை ஏற்பட்டிருந்தது.

எனினும், அச்சுறுத்தல்கள், கெடுபிடிகள், எதிர்ப்புக்குகளுக்கு மத்தியிலும் தொடர்ந்தும் விகாரைக்கு எதிரான போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.










# விகாரைக்கு எதிராக தையிட்டி மண்ணில் பெரும் போராட்டம்



# மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 1962 | | 2025 |
| 09 | | 02 |
| 06 | | 09 |



## இராஜநாயகம் பாரதி
### (மூத்த ஊடகவியலாளர் )

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கொழும்பையும் திருநெல்வேலியையும் வசிப்பிடமாகவும் கொண்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் இராஜநாயகம் பாரதி கடந்த சனிக்கிழமை (09.02.2025) அன்று திருநெல்வேலியில் அவர் வாழ்ந்த இல்லத்தில் காலமானார் .

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரபல கணித ஆசிரியர் சு. இராஜநாயகம் – சிவயோகம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வடமராட்சி விவாகப் பதிவாளர் சி. தாமோதரம்பிள்ளை - தனலக்ஷ்மி தம்பதியரின் அன்பு மருமகனும் தேவகியின் அன்புக் கணவரும் பார்த்தீபனின் பாசமிகு தந்தையும் அமரர் பரதன் , சுரபி ஆகியோரின் அன்பு சகோதரனும் ப. விநோதினி, க.சிவராசா, சுகந்தி, கௌரி, காலஞ்சென்ற நளினி, பரன், பாமதி, சபேசன், பத்மநிதி, சுபேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்

அன்னாரின் புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக 105/1 பலாலி வீதியில் உள்ள அவரது இல்லத்தில் எதிர்வரும் வியாழக்கிழமை 13. 02. 2025 வரை வைக்கப்படும்.

வியாழன் அன்று காலை 9:00 மணியளவில் அஞ்சலி உரைகள் நிகழ்த்தப்பட்டு 11:00 மணியளவில் ஈமக் கிரிகைகளைத் தொடர்ந்து 1:30 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு :
077 189 4012 (மனைவி)
+44(0)7580763790 (மைத்துனர்)

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# குரங்குச் சேட்டை வேண்டாம்!

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் சில விடயங்களைச் சுட்டிக் காட்டி இருக்கிறார். அவை கவனிக்கத்தக்கவை. குறிப்பாக ஆளும் தேசிய மக்கள் சக்தி கவனத்தில் எடுக்க வேண்டிய விடயங்கள் அவை.

மேடைகளில் வீர வசனம் பேசுவதை விட, நடைமுறையில் ஆட்சி செய்வது எவ்வளவு சிக்கலானது என்பதை இப்போது ஜே.பி.வி. உள்ளிட்ட தேசிய மக்கள் சக்தி புரிந்து கொண்டிருக்கும் என்று அவர் கூறுவது இன்றைய ஆட்சித் தரப்பாருக்கு நல்ல பாடமாக இருக்கும் என நம்பலாம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் முன்னெடுத்த உள்நாட்டு யுத்தத்தின் போது 33,000 மெகாவோல்ட் மின் மாற்றிகள் தீயிட்டு கொளுத்தப்பட்ட போது கூட, நாடளாவிய ரீதியில் மின்துண்டிக்கப்படவில்லை. அவ்வாறிக்கையில் குரங்கின் மீது பழி சுமத்தி குரங்கு சேட்டைகள் காண்பிக்க வேண்டாம். அளவுக்கதிகமாக மக்களை ஏமாற்றவும் முற்பட வேண்டாம் என்று ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தை எச்சரித்துள்ளதார் எஸ்.எம்.மரிக்கார்.

ஞாயிறன்று ஏற்பட்ட மின்தடைக்கு மின்சக்தி அமைச்சர் குரங்குகள் மீது பழி சுமத்தினார். அவ்வாறு ஒரு குரங்கால் முழு நாட்டுக்கும் மின் துண்டிப்பை ஏற்படுத்த முடியுமா? அமைச்சர் குறிப்பிட்ட இந்தக் கருத்து பாரிய சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில் பின்னர் கடந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளே இப்பிரச்சினைக்குக் காரணம் என்று அமைச்சர் குறிப்பிட்டார். கடந்த அரசாங்கங்களை குறை கூறியே இவர்கள் ஆட்சியைக் கைப்பற்றினர். தற்போது ஆட்சியிலிருந்து கொண்டும் அதனையே கூறுகின்றனர் என்று பிரதான எதிக்கட்சியின் எம்.பி. கேள்வி எழுப்புவதில் நியாயம் இருக்கவே செய்கின்றது.


'சிஸ்டம் சேஞ்ச்' (முறைமையில் மாறறங்கள்) ஏற்படுத்துவார்கள் என்று கூறி அதிகாரத்தைக் கைப்பற்றியவர்களின் இயலாமை தற்போது வெளிப்பட ஆரம்பித்துள்ளது என்று சுட்டிக்காட்டப்படுவதும் சரியானதே.

நுரைச்சோலை நிலக்கரி மின்உற்பத்தி நிலையத்திலுள்ள மின் பிறப்பாக்கிகள் செயலிழந்தமையால் மின்வெட்டு நிலைமை ஏற்பட்டது என இப்போது கூறுகின்றனர். கடந்த காலங்களில் நுரைச்சோலை மின் பிறப்பாக்கிகள் செயலிழந்த சந்தர்ப்பங்களில், அது தொழிற்சங்க மாபியாக்களின் செயல் என விமர்சித்தனர். அவ்வாறெனில் இந்த அரசாங்கத்துக்கும் அந்த மாபியாக்களை கட்டுப்படுத்த முடியாமல் போயுள்ளதா என்று எதிரணி கிளப்பும் கேள்வியில் நியாயம் உண்டு.

சூரிய மின் உற்பத்திக் கலங்களால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் அளவு அதிகம் என இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் சங்கம் குறிப்பிடுகிறது. சூரிய மற்றும் காற்றாலை மின் உற்பத்திகள் பிரபலமாகும் பட்சத்தில் நிலக்கரி மற்றும் டீசல் மாபியாக்கள் பாதிக்கப்படும். எனவே அவற்றைப் பாதுகாப்பதற்காகவே இவ்வாறான கதைகள் கூறப்படுகின்றன. இந்த மாபியாக்களின் தேவைக்கேற்ப செயற்படுவதற்கு அரசாங்கம் இணங்கியுள்ளதா என்றும் எதிரணி கேள்வி எழுப்பியுள்ளது.

ஏனைய ஆட்சி காலங்களில் இவ்வாறு ஏதேனும் பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தால் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தலில் இருப்பதாகக் குறிப்பிட்டு வீதிக்கு இறங்கியிருப்பர் தேசிய மக்கள் சக்தியினர் என்று எதிரணி சுட்டுவதும் உண்மைதான்.

ராஜபக்ஷக்களை ஆட்சியில் அமர்த்தி, அவர்களை துரத்துவதற்கு மைத்திரிக்கு வாக்களித்து, பின்னர் கோட்டாபயவுக்கு சந்தர்ப்பம் அளித்து, அவரையும் நாட்டை விட்டு ஓடச் செய்தவர்களே இந்த அரசையும் ஆட்சியில் அமர்த்தியிருக்கின்றனர் என்பதை மறந்து விட வேண்டாம் என்று மரிக்கார் எம்.பி. சொல்வதை ஆட்சித் தரப்பினர் புரிந்து கொள்வது நல்லது.


Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Haram NEK 318
Haram NEK 473
Haram NEK 477
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555



# வட்டு. இந்துவின் இளம் விவசாய விஞ்ஞானிகளுக்குக் கௌரவிப்பு

வட்டு. இந்துவின் இளம் விவசாய விஞ்ஞானிகள் கௌரவிப்பு நிகழ்வானது பாடசாலை முதல்வர் கு.லங்கா பிரதீபன் தலைமையில் டாக்டர் ரட்ணம் நித்தியானந்தனின் அனுசரனையுடன் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் நடைபெற்றது.

இதில் அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட இளம் விவசாய விஞ்ஞானப் போட்டியில் தங்கப் பதக்கத்தைப் பெற்ற ஜந்து மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இதில் பிரதம விருந்தினராகக் கலாநிதி ரட்ணம் நித்தியானந்தனும் சிறப்பு விருந்தினர்களாக விவசாயப் பிரதிப் பணிப்பாளர் எஸ். ரமேஸ், வலிகாமம் வலய ஆலோசகர் பி.அருந்தவம், யாழ். வெளிக்கள மத்திய நிலைய முகாமையாளர் ஏ.கோகுலராஜன ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அத்தோடு பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வைத் தலைமை தாங்கி நடத்திய பாடசாலை அதிபர், அந்த நிகழ்வுக்கு அனுசரணை வழங்கிய டாக்டர். நித்தியானந்தனுக்கு நன்றி கூறியதோடு வெற்றி பெற்ற மாணவர்களையும் வழிப்படுத்திய ஆசிரியரையும் தேவையான வழிகாட்டல்களை வழங்கிய சிறப்பு விருந்தினர்களையும் நன்றியுடன் பாராட்டினார்.








# சமூக வலுவூட்டல் செயலமர்வு

அம்பாறை மாவட்ட உத்தியோகத்தர்களுக்கான சமூக வலுவூட்டல் வேலைத் திட்டம் தொடர்பான அறிவூட்டும் செயலமர்வு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் நேற்று (11) மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் மாவட்ட செயலாளர் சிந்திக்க அபேவிக்கிரம தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் கிராமிய அபிவிருத்தி சமூக பாதுகாப்பு சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சருமான வசந்த பியதிஸ்ஸ நாடாளுமன்ற உறுப்பினர்களான முத்துமனிக்கே றத்வத்த, மஞ்சுள ரத்னாயக்க மற்றும் சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் நாயகம் திருமதி ஏ. பாக்கியராஜா, மாவட்ட மேலதிக செயலாளரும் மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளருமான எஸ். ஜெகராஜன், பிரதேச செயலாளர்கள், சமுர்த்தி முகாமையாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# வவுனியா பல்கலைக் கழகத்தில் தொழில் வாய்ப்புக்கான பயிற்சி!





இரட்ணம் பவுண்டேஷன் மற்றும் விசன்ஸ் குளோபல் எம்பவர்மென்ட் நிறுவனங்களால், வவுனியா பல் கலைக்கழகத்தில் தொழில் வழிகாட்டல் அலகின் ஒருங்கிணைப்புடன், ஐந்து நாள்கள் தொழில் வாய்ப்புக்கான தலைமைத்துவப் பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது.

ஆங்கில மொழி மூலம் நடத்தப்பட்ட இந்தப் பயிற்சிப் பட்டறையில் வவுனியா பல்கலைக்கழகத்தின் வணிகக் கல்விப் பீடத்தைச் சார்ந்த சிங்கள, முஸ்லீம் மற்றும் தமிழ் மாணவர்கள் உள்ளடங்கலாக மொத்தம் 35 மாணவர்கள் பங்குபற்றினர்.

தலைமைத்துவம் மற்றும் தொழில் முறை திறன்கள் தொடர்பில் பங்கேற்றல் முறையில் பயிற்றுவிக்கப்பட்டனர்.

இந்தப் பயிற்சி பல்கலைக்கழக மாணவர்களின் தனிப்பட்ட மற்றும் தொழில்சார் வாழ்க்கை தொடர்பான ஊக்குவிப்புக்குச் சிறந்த வாய்ப்பாக அமைந்தது எனலாம்.

பயிலுனர்கள் இந்தப் பயிற்சியில் தங்களது வாண்மைத்துவத்தை மேம் படுத்துவது தொடர்பிலும், தொழில் ரீதியாகத் தயார்படுத்துவதிலும் ஊக்க மெடுத்து, தலைமைத்துவம் சார்ந்த துலங்கல்களை வெளிப்படுத்தியிருந் தார்கள்.

ஒவ்வொரு பயிலுனரும் தமது வாழ் வின் அர்த்தம் பற்றி சிந்தித்து, சுய விருத்தி திட்டம் ஒன்றை உருவாக்கியி ருந்தார்கள்.

நீண்ட கால அடிப்படையில் தொடர் கண்காணிப்புடன் ஒரு வருட நிகழ்ச்சித் திட்டமாக செயற்படுத்தப்பட்டு, மாணவர் களை சிறந்த திறன் கொண்டவர்களாக உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட இந்தப் பயிற்சியில், பயிலு னர்கள் ஐந்து குழுக்களாக செயல்பட்டு சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதை நோக்கமாகக் கொண்ட செயல்திட் டங்களை உருவாக்கியுள்ளனர்.

தொழில் முயற்சியாண்மை, மரம் நடுதல், தொழில் நுட்பம் தொடர்பான விழிப்பூட்டல் மற்றும் கழிவு முகாமைத் துவம் போன்ற சமூக செயல் திட்டங் களை எதிர் வரும் ஒரு மாத காலப் பகுதியில் தொழில் வழிகாட்டல் அலகின் ஆலோசனையில் வெவ்வேறு தளங்க ளில் அமுலாக்கம் செய்யவுள்ளனர்.

இவ்வாறு, இந்தப் பயிற்சியின் மூலம், சமூகப் பிரச்சினைகளை தீர்ப்ப தற்கான வினையூக்கியாக பயிலுனர்கள் செயல்பட்டு, சிறந்த தலைவர்களாகவும், சமூகத்துக்குப் பயனுள்ள நற்பிரஜைக ளாகவும் தங்களை வெளிப்படுத்த உள்ளனர்.

பயிற்சி பட்டறையின் இறுதி நாளில் நடைபெற்ற சான்றிதழ் வழங்கும் வைபவத்தில், பல்கலைக்கழக உபவேந் தரும் சிரேஷ்ட பேராசிரியருமான அற்புதராஜா அனைத்து பயிலுனர்க ளுக்கும் சான்றிதழ்கள் வழங்கி னார்.



# ஊடகவியலாளர் பாரதியின் இழப்பு இந்த சமூகத்துக்குப் பேரிழப்பாகும்!

## பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் இரங்கல்

(த.சுபேசன்)

மூத்த ஊடகவியலாளர் இராஜநாயகம் பாரதியின் இழப்பானது இந்த சமூகத்துக்குப் பேரிழப்பாகும் என்று பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் வி.சகாதேவன் தெரிவித்துள்ளார்.

ஊடகர் பாரதியின் மறைவை முன்னிட்டு வெளியிட்ட இரங்கல் செய்தியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டிருந்தார்.



மேலும் அவர் தனது இரங்கல் செய்தியில்,

ஊடகவியலாளர் பாரதி மிகக் குறுகிய காலத்துக்குள் பனை சார்ந்த எமது செயற்பாடுகளுக்கு சிறந்த ஆலோசனைகளை வழங்கியிருந்தார்.

அத்தோடு மூன்று மாத காலத்துக்குள் இரண்டு தடவைகள் பனை அபிவிருத்திச் சபைக்கு வருகை தந்திருந்தார்.

அவர் தனது இயலாத நேரத்திலும் கூட எமது அழைப்பை ஏற்று பனை சார்ந்த அபிவிருத்தி விடயங்களுக்கு தனது ஒத்துழைப்பை வழங்கியிருந்தார்.

இவ்வாறான சிறந்த திறமை கொண்ட ஊடகவியலாளருடைய மறைவு தமிழ் சமூகத்துக்குப் பேரிழப்பாகும்.– என்றார்.

# ஊடகவியலாளர்களின் கௌரவம், சுதந்திரம் தொடர்பில் அதிக கவனம் எடுத்தவர் பாரதி!

## கோபாலபுரம் விவேக பார்வை ஊடக மையத்தின் தலைவர்

(அபு அலா )

ஊடகவியலாளர்களின் கௌரவம், சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று செயற்பட்டவர் அண்ணன் பாரதி.

மிகவும் அமைதியான சுபாவத்தைக் கொண்ட மூத்த பத்திரிகையாளர் அண்ணன் பாரதி இராஜநாயகத்தின் மறைவு ஆழ்ந்த கவலையளிக்கிறது.





இவ்வாறு திருகோணமலை மாவட்ட கோபாலபுரம் விவேக பார்வை ஊடக மையத்தின் தலைவர் எஸ்.எம்.முபீன் தனது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஊடகவியலாளர்களின் கருத்துக்களில் இருக்கும் நியாயங்களைப் புரிந்து கொண்டு, அவர்களின் உணர்வுகளுக்கும், கருத்துக்களுக்கும் மதிப்பளித்து, ஆதரவும், ஒத்துழைப்பும் வழங்கியவர்.ஊடகவியலாளர்களுக்கான கௌரவமும், பாதுகாப்பும், சுதந்திரமும் கிடைக்க வேண்டும் என்ற நன்நோக்கில் செயற்பட்ட ஒருவர் பாரதி.

அமைதியான அணுகுமுறைகளையும் ஆழமான கருத்தியலையும் கொண்டிருந்த அண்ணன் பாரதி , ஊடக அறத்தின் வழிநின்று அனைத்துத் தரப்பினருடனும் மிக அன்பான உறவுகளை பேணியவராவார். குறிப்பாக ஊடகத்துறையில் மிக ஆழமான தடயங்களைப் பதித்துவிட்டு, தமிழ் ஊடகத் துறைக்கு பாரிய வெற்றிடத்தையும் ஏற்படுத்திவிட்டுச் சென்றுவிட்டார்.

அன்னாரின் இழப்பு, தமிழ் ஊடகத் துறைக்கு மட்டுமின்றி தமிழ் பேசும் ஊடகவியலாளர்களுக்கும், மக்களுக்கும் பாரிய பேரிழப்பாக அமைந்துள்ளது.

அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் விவேக ஊடக ஒன்றியம் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.– என்று தெரிவித்துள்ளார்.

# திடீர் மரண விசாரணை அதிகாரியாக சுரேந்திரசேகரன் சத்தியப் பிரமாணம்

(கி.வசந்தன்)

வவுனியா வடக்கு உள்ளிட்ட மூன்று பிரிவுகளுக்கான பதில் திடீர் மரண விசாரணை அதிகாரியாக லா.சுரேந்திர சேகரன் வவுனியா மாவட்ட நீதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

வவுனியா பிரதேச செயலக பிரிவில் திடீர் மரண விசாரணை அதிகாரியாக செயற்பட்டுவந்த லா.சுரேந்திரசேகரன் தற்போது கடமையாற்றும் பகுதிக்கு மேலதிகமாக வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு, வெங்கல செட்டிகுளம் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளுக்கான பதில் திடீர் மரண விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்ட நிலையில், மாவட்ட நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவர், வவுனியா விபுலானந்தா கல்லூரியின் பழைய மாணவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.





# மாபெரும் வலைப்பந்தாட்ட பயிற்சி முகாம் புங்குடுதீவில்

(த.சுபேசன்)

புங்குடுதீவு அனைத்து விளையாட்டு கழகங்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தினரால் புங்குடுதீவில் வலைப்பந்தாட்ட பயிற்சி முகாம் ஒன்று நடத்தப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் வலைப்பந்தாட்டத்தை மேம்படுத்தும் நோக்கில் யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தினரால் புங்குடுதீவு மத்திய கல்லூரி மைதானத்தில் யாழ். மாவட்டத்தின் முன்னணி பயிற்சியாளர்களால் இந்தப் பயிற்சி முகாம் முன்னெடுக்கப்பட்டது.

அத்தோடு எதிர்வரும் மார்ச் மாதம் மகளிர் தினத்தை முன்னிட்டு நடத்தப் படவுள்ள 16 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டித் தொடருக்கான தெரிவும் அன்றைய தினம்



இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கான நிதி அனுசரணையைப் புங்குடுதீவு உலக மைய தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் ஒருங்கிணைப்பாளர்கள் வழங்கியிருந்தனர்.





# சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்காத உணவகத்துக்கு 20 ஆயிரம் ரூபா தண்டம்!

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக எல்லைக்கு உட்பட்ட தென் கிழக்கு பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் உள்ள சிற்றுண்டி சாலை சுகாதார முறையில் காணப்படவில்லை என்று சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றது.

இந்த முறைப்பாடுக்கு அமைய சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம். நௌசாத் தலைமையிலான குழுவினர் திடீர் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன் போது, சுகாதார வைத்திய அதிகாரிகளால் குறித்த சிற்றுண்டி சாலை உரிமையாளருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. சம்மாந்துறை நீதிவான் முன்னிலையில் ஆஜர் படுத்திய போது 20 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. எச்சரிக்கையும் செய்யப்பட்டது.

இந்தச் சோதனை நடவடிக்கையில் பொதுச் சுகாதார பரிசோதகளான எம்.டி. நசார், டி. தினேஸ், ஏ.எம். நம்சீன் உள்ளிட்ட அதிகாரிகள்



### லசந்த விக்கிரமதுங்கவுக்கு அரசு வழங்கும் நீதி:

# தமிழ் ஊடகர் கொலைகளுக்கு நியாயம் இல்லையா?

● நவீனன்

கடந்த வருடம் வெளியிடப்பட்ட தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் லசந்த விக்கிரமதுங்க உட்பட பல ஊடகர்களின் படுகொலைக்கான நீதி கிடைக்கும் என்று உறுதியாக தெரிவிக்கப்பட்டு இருந்தது.

இதனை உறுதிப்படுத்தும் வகையில் படுகொலை செய்யப்பட்ட லசந்த விக்கிரமதுங்கவுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் என்றும் உறுதியாகவே இருக்கிறோம் என பிரதமர் ஹரிணி தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் நீதி அவசியம். லசந்தவின் குடும்பம் போன்று வடக்கு - கிழக்கு மாகாணங்களில் படுகொலை செய்யப்பட்ட பல ஊடகவியலாளர்களுக்கு நீதி இதுவரை கிடைக்கவில்லை.

நிமலராஜன் தொடக்கம் இசைப்பிரியாவரை இவர்களுக்கான நீதியையும் பிரதமர் பெற்றுக் கொடுப்பாரா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

### கொடூரமாக கொல்லப்பட்ட தமிழ் ஊடகர்கள்

2000 முதல் 2010 வரையிலான ஆண்டுகளில் இலங்கை வீதிகளில் உலாவந்த வெள்ளை வான்களும் திடீரென தொலைந்து போன பத்திரிகையாளர்களும் மிக எளிதாகக் கடந்து போகக் கூடிய ஒரு நிகழ்வுகளாக இருந்தமையை நாம் மறந்து விட முடியாது.

பத்திரிகையாளர்கள் முன்னைய ஆளும் அரசுகளுக்கு எதிரானவர்களாகச் சித்திரிக்கப்பட்டு கொடூரமாக கொல்லப்பட்டிருக்கின்றனர். குறிப்பாக மயில்வாகனம் நிமலராஜன், பிரகீத் எக்னலிகொட, சிவராம் தராக்கி, கெய்த் நோயார், லசந்த விக்கிரமசிங்க, போடல ஜெயந்தா என அநீதி இழைக்கப்பட்டு கொல்லபட்ட பத்திரிகையாளர்களின் பட்டியல் நீண்டதாகும்.

ஆனாலும் போருக்குப் பின்னரான கடந்த ஆண்டுகளில் இலங்கைப் பத்திரிகையாளர்களின் வாழ்க்கை என்பது இரத்தத்தாலும் காயங்களாலும் எழுதப்பட்டிருக்கிறது. அரசுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் பத்திரிகையாளர்களின் நிலை என்ன என்பதை அறியாமல் கொலை செய்யப்படும் அளவுக்குக் கொண்டு சென்றதும் வரலாறாகும்.

போர்க் காலங்களில் அரசின் அநீதிக்கு எதிராகக் குரல் கொடுத்து தங்கள் குரல் வளைகள் நெறிக்கப்பட்ட நிலையிலும் இறுதிவரை போராடி வந்த கடந்தகால பத்திரிகையாளர்களே அந்தப் போராட்டச் சூழலில் மக்களின் நம்பிக்கை குரல்களாக அடையாளம் காணப்பட்டு இருக்கின்றனர்.

பத்திரிகையாளர்கள் எதிர்கொண்ட கடினமான தருணங்களை தற்போது நினைவுகூர வேண்டியது காலத்தின் அவசியமாகும்.

### பிரதமர் ஹரிணி அதிக கரிசனை!

2009 இல் கொலை செய்யப்பட்ட லசந்த விக்கிரமதுங்கவின் மகள் அரச தரப்புக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் மற்றும் லசந்த விக்கிரமதுங்க படுகொலை



விசாரணைகள் தொடர்பில் கடந்த வாரம் நாடாளுமன்றிலும் குறிப்பிடத்தக்க கவனத்தை ஈர்த்தது.

படுகொலை செய்யப்பட்ட பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் மகளான அஹிம்சா விக்கிரமதுங்க அனுப்பிவைத்த கடிதம் எனக்கு கிடைத்தது என்றும், அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை பார்த்து வேதனையடைந்தேன் என்றும் பிரதமர் ஹரிணி தெரிவித்துள்ளார்.

பதில் கடிதம் அனுப்புவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளேன். அதிகளவில் கரிசனை கொண்டுள்ளேன். லசந்த விக்கிரமதுங்கவுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் என்றும் உறுதியாகவே இருக்கிறோம் என பிரதமர் ஹரிணி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, படுகொலை செய்யப்பட்ட லசந்த விக்கிரமசிங்க தொடர்பில் சட்ட மா அதிபர் திணைக்களம் பொறுப்புக்கூற வேண்டும், படுகொலை செய்யப்பட்ட லசந்த விக்கிரமதுங்க விவகாரம் தேசிய பிரச்சினையாகவே பார்க்கப்பட வேண்டும் என்று தேசிய ஊடக சங்கம் வலியுறுத்து வருகிறது.

### அநுர அரசு நீதியை நிலைநாட்டுமா?

ஸ்ரீலங்கா நீதிமன்றம், சட்ட மா அதிபர் திணைக்களம் நீதியை நிலைநாட்டுவதற்காகவே செயற்படுகிறது என்றும், அதற்கான சூழலை அரசு ஏற்படுத்திக் கொடுக்கும் என்றும் ஆளும் பிரதமர் கூறியுள்ளார்.

கொலையாளிகளின் தற்போதய நிலவரம் குறித்து புதிய விசாரணைகளை மேற்கொள்ளவும், சாட்சியம் திரட்டவும் ஆலோசிக்கப்படும் என்றும், அதற்கான வலியுறுத்தலை சட்ட மாஅதிபரிடம் முன்வைப்பேன் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் சட்டமா அதிபர் திணைக்களம் அரசியல் பிடிக்குள் சிக்குப்படாமல் இருப்பதற்கும், நீதியை நிலைநாட்டுவதற்கும் அரசு பொறுப்புடன் செயற்படும் என்பதை குறிப்பிட்டுக் கொள்கிறேன் என்று பிரதமர் ஹரிணி நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

### கொலையான ஊடகர்களுக்கு நீதி கிடைக்குமா?

ஈழப்போர் தீவிரமடைந்த காலகட்டங்களில் 1990 முதல் 2010 வரையிலான ஆண்டுகளில் திடீரென பத்திரிகையாளர்கள் காணாமல் போகும் சம்பவங்கள்

தொடர்ச்சி▼




# தமிழ் ஊடகர் கொலைகளுக்கு நியாயம் இல்லையா?

**தொடர்ச்சி▲**

பல அரங்கேறின. மிக்க ஆளுமையான மயில்வாகனம் நிமலராஜன், பிரகீத் எக்னலிகொட, சிவராம் தராக்கி, கெய்த் நோயார், லசந்த விக்கிரமதுங்க, போடல ஜெயந்தா என அநீதி இழைக்கப்பட்ட பத்திரிகையாளர்களின் பட்டியல் பெரிதாகும்.

தராக்கி என்ற புனைப்பெயருடன் எழுதிவந்த தமிழ் ஊடகவியலாளர் சிவராம், முன்னைய அரசுகளுக்கு பல விமர்சன கருத்துக்களை தெரிவித்து இருக்கிறார். அவர் எழுதியது போல, தன்னுடைய ஊடக நண்பர் நடேசன் கொலை செய்யப்பட்டபோது, அரசின் அடுத்த குறி தானாக இருக்கலாம் என்று நண்பர்கள் பலர் தன்னை எச்சரித்ததாகக் காணொலி ஒன்றில் பதிவு செய்திருந்தார்.

அவர் பதிவிட்டதைப் போல, 2005 ஏப்ரல் 28 அன்று வெள்ளை வானில் கடத்தப்பட்ட சிவராம் அடுத்த நாள் கொலையுண்ட நிலையில் சடலமாகக் கிடைக்கப் பெற்றார்.

இதேபோல் கொல்லப்பட்ட மற்றொரு பத்திரிகையாளர் லசந்த விக்கிரமதுங்க, தான் கொல்லப்படப் போகிறோம் என்பதை அறிந்த லசந்த, தனது இறுதித் தலையங்கத்தைத் தன் இறப்புக்குப் பிறகு பிரசுரிக்கச் சொல்லி தனது ஊடக ஊழியர்களிடம் ஒப்படைத்துச் சென்றுள்ளார்.

2,500 வார்த்தைகளைக் கொண்ட அந்தத் தலையங்கத்தை அவர் தனது அலுவலகக் கணினியில் 'ஃபைனல் எடிட்' *(Final Edit)* எனக் குறிக்கப்பட்ட கோப்பில் சேமித்து வைத்திருந்தார். அவர் கொலையின் பின்னர் அந்த 2,500 வார்த்தை தலையங்கத்தை உலகின் முன்னணிப் பத்திரிகைகள் அனைத்தும் பிரசுரித்தன.

"எனது படுகொலை சுதந்திரத்தின் தோல்வியாகக் கருதப்படாது, உயிர் பிழைப்பவர்களுக்கு ஒரு உத்வேகமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்" என்று அந்தத் தலையங்கத்தை முடித்திருந்தார் லசந்த விக்கிரமதுங்க.

இதன் பின்னர் போடல ஜெயந்தா, கெய்த் நோயார் போன்றோர் அடையாளம் தெரியாத நபர்களால் கடத்தப்பட்டு கடும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டனர். 2010 ஆம் ஆண்டு ஜனவரி 24, ஜனாதிபதி தேர்தலுக்கு இரண்டு நாள்களுக்கு முன்னர் காணாமல் போன கார்ட்டூனிஸ்ட் பிரகீத் எக்னலிகொடவின் நிலை என்னவென்று இன்றுவரை தெரியவில்லை.

**ஆள்கடத்தல்களும் காணாமல் போதலும்**

இலங்கையில் ஆள்கடத்தல்களும் காணாமல் போதலும் 1980 ஆம் ஆண்டிலிருந்தே தொடர்ந்த வண்ணம் உள்ளன. இலக்கத் தகடு அற்ற வாகனங்களில் (வெள்ளைவான்) வரும் இனம் தெரியாத குழுக்களால் பலவந்தமாக இந்த வாகனங்களுக்கு ஏற்றப்பட்ட நபர்கள் பின் காணாமல் போயினர்.

போர் நடந்த வருடங்களில் இலங்கையில் பல நூற்றுக் கணக்கான தமிழர்கள் கடத்தப்பட்டு அல்லது காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். உலகில் இலங்கையிலேயே அதிகமானோர் காணாமல் போகின்றனர் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் கூறியுள்ளது.

காணாமல் போவதற்கு அரசே காரணம் என பல காணாமல் போனவர்களின் உறவினர்களும் சாட்சியங்களும் கூறிய போதும் முன்னைய அரசுகள் எந்தவித பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளவில்லை.

இத்தகைய குற்றசெயல்களை விசாரிக்க அமைக்கப்பட்ட ஆணையங்கள் சரிவர தமது வேலையைச் செய்யவில்லை என்று அதைக் கண்காணிக்க அமைக்கப்பட்ட சர்வதேச சுயாதீன குழு தெரிவித்துள்ளது.

**ஊடகர் இசைப்பிரியா**

ஊடகத்துறையில் பணியாற்றியதுடன் கலைத்துறையிலும் சிறப்பான படைப்புக்களை வழங்கிய இசைப்பிரியா இறுதிப் போரில் முள்ளிவாய்க்கால் பகுதியில் மே 17 திகதி வட்டுவாகல் பகுதியில் இலங்கை இராணுவத்திடம் சரணடைந்தார்.

அதன் பின்னர் எவ்வாறு படுகொலை செய்யப்பட்டார் என்பதற்கு சனல் நான்கு ஊடகத்தின் ஊடாக ஆதாரங்கள் வெளிவந்தன. அதன் அடிப்படையில் சரணடைந்த ஊடகவியலாளர் படுகொலை செய்யப்பட்ட முறை மனித குலமே வெட்கித் தலை குனியும் அளவுக்கு அசிங்கமானது.

எனவே தற்போதய பிரதமர் இசைப்பிரியாவுக்கான நீதியையும் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

இறுதிப் போரில் இசைப்பிரியாவின் கணவன் ஸ்ரீராம் கொல்லப்பட்டதுடன் அவரது மகள் அகல்யா பிறந்து இரண்டு மாதங்களில் மருத்துவ வசதியும் பால்மாவும் இல்லாமையால் புதுமாத்தளனில் இறந்தமை உலகு அறிந்ததே.

அத்தனை துயரங்களையும் சுமந்து கொண்டு சரணடைந்த இசைப்பிரியா இறுதியில் படுகொலை செய்யப்பட்டார். இவருக்கான நீதி விசாரணை எப்போது கிடைக்கும் என்பது தெரியவில்லை.

லசந்தவின் குடும்பம் போன்று வடக்கு கிழக்கு மாகாணங்களில் படுகொலை செய்யப்பட்ட பல ஊடகர்களுக்கு நீதி இதுவரை கிடைக்கவில்லை. நிமலராஜன் தொடக்கம் இசைப்பிரியா வரையான இவர்களுக்கான நீதியையும் பிரதமர் பெற்றுக் கொடுப்பாரா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# இந்தியாவில் முதலீடு செய்ய பிரான்ஸுக்கு மோடி அழைப்பு!





இந்தியாவில் கிடைக்கும் பரந்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளவும், தொழில்நுட்பம், புதுமை மற்றும் நிலையான வளர்ச்சி போன்ற துறைகளில் ஒத்துழைக்கவும் பிரான்ஸ் நிறுவனங்களை இந்திய பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

பாரிஸில் நடந்த 14 ஆவது இந்தியா - பிரான்ஸ் தலைமை நிர்வாக அதிகாரிகள் மன்றத்தில் உரையாற்றிய பிரதமர் மோடி, இந்தியாவுடனான தங்கள் கூட்டாண்மையை ஆழப்படுத்த பிரான்ஸ் வர்த்தகர்களுக்கு அழைப்பும் விடுத்தார்.

அண்மைய வரவு - செலவுத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்களின் தொடர்ச்சியை எடுத்துரைத்த அவர், முதலீடுகளை அதிகரிப்பதற்கும் வணிகம் செய்வதை எளிதாக்குவதற்கும் அவற்றின் திறனையும் இதன்போது வலியுறுத்தினார்.

அன்னிய முதலீட்டை ஈர்ப்பதில் இந்தியாவின் முற்போக்கான அணுகுமுறையை அடிக்கோடிட்டுக் காட்டிய மோடி, காப்பீட்டுத் துறையை 100 சதவீத அன்னிய நேரடி முதலீட்டுக்கு அரசாங்கம் திறந்துவிட்டதாகக் கூறினார்.

இந்த நடவடிக்கைகள், தூய்மையான மற்றும் திறமையான ஆற்றல் தீர்வுகளை நோக்கி இந்தியா முன்னோக்கி செல்ல உதவும் என்றார்.

பொருளாதாரக் கொள்கைகளை எளிமைப்படுத்தவும், நெறிப்படுத்தவும் அரசு எடுத்து வரும் முயற்சிகள் குறித்து பிரதமர் மோடி மேலும் விளக்கினார்.

வர்த்தகத்தை எளிதாக்கும் வகையில் சுங்க விகிதக் கட்டமைப்பு பகுத்தறிவு செய்யப்பட்டுள்ளதாகவும், குடிமக்களின் வாழ்க்கையை எளிதாக்கும் வகையில் புதிய, எளிமைப்படுத்தப்பட்ட வருமான வரிக் குறியீடு அறிமுகப்படுத்தப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நம்பிக்கை அடிப்படையிலான பொருளாதார நிர்வாகத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒழுங்குமுறைசீர்திருத்தங்களுக்கான உயர்மட்டக் குழுவை நிறுவுவதைக் குறிப்பிட்டு, தொடர்ச்சியான சீர்திருத்தங்களுக்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை அவர் மீண்டும் உறுதிப்படுத்தினார்.

அரசாங்கத்தின் வணிக சார்பு நிலைப்பாட்டை எடுத்துரைத்த பிரதமர் மோடி, அண்மைய ஆண்டுகளில் 40,000 இற்கும் மேற்பட்ட இணக்கங்கள் பகுத்தறிவு செய்யப்பட்டு இந்தியாவை மிகவும் வணிக நட்பு நாடாக மாற்றியுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

தேசிய உற்பத்தி இயக்கம் அமைப்பது உட்பட இந்தியா எடுத்துள்ள முயற்சிகளை ஆய்வு செய்யுமாறும் பிரதமர் மன்றத்தை வலியுறுத்தினார்.

இந்தியாவில் கிடைக்கும் பரந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி, தொழில்நுட்பம், புதுமை மற்றும் நிலையான வளர்ச்சி போன்ற துறைகளில் ஒத்துழைக்குமாறு அவர் பிரெஞ்சு நிறுவனங்களை வலியுறுத்தினார்.

பிரதமர் மோடி தற்போது பெப்ரவரி 10 முதல் 12 வரை பிரான்ஸ் நாட்டுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்.

செவ்வாயன்று பாரிஸில் பிரெஞ்சு ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனுடன் ஏ.ஐ. உச்சி மாநாட்டிற்கு அவர் தலைமை தாங்கினார்.

இதைத் தொடர்ந்து, பெப்ரவரி 12-13 ஆம் திகதிகளில் அமெரிக்கா செல்லும் பிரதமர் மோடி, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் அமெரிக்க நிர்வாகத்தின் மூத்த தலைவர்களை சந்தித்துப் பேசவுள்ளார்.





# அயோத்தி ஸ்ரீ ராமர் ஆலயத்தின் தலைமை அர்ச்சகர் காலமானார்

அயோத்தியில் உள்ள ஸ்ரீ ராம ஜென்மபூமி ஆலயத்தின் தலைமை அர்ச்சகர் ஆச்சார்யா சத்யேந்திர தாஸ் (Acharya Satyendra Das), மூளைச்சாவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், இன்று புதன்கிழமை காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 85.


லக்னோவில் உள்ள சஞ்சய் காந்தி முதுகலை மருத்துவ அறிவியல் கழக மருத்துவமனையில் சிகிச்சையின் போது அவர் காலமானதாக அவரது சீடர் பிரதீப் தாஸ் உறுதிப்படுத்தினார். அவரது இறுதி கிரியைகள் நாளை வியாழக்கிழமை அயோத்தியில் உள்ள சரயு நதிக்கரையில் நடைபெறும்.

மேலும் அவரது உடல் தற்போது லக்னோவில் இருந்து புனித நகரத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

ஆச்சார்யா சத்யேந்திர தாஸ் ஞாயிற்றுக் கிழமை மூளைச்சாவு அடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அவர் நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தத்தாலும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தரப்பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் தனது இரங்கல் செய்தியில், வயதான அர்ச்சகரின் மரணம் ஈடுசெய்ய முடியாத இழப்பு என்று கூறியுள்ளார்.



# ட்ரம்பின் மிரட்டல் பேச்சுகளைத் பெரிதாக எடுத்து கொள்வதில்லை

## ஹமாஸ் பதிலடி

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் மிரட்டல் பேச்சுகளைத் தாம் பெரிதாக எடுத்துக் கொள்வ தில்லை என ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை இரு தரப்பினரும் மதிக்க வேண்டும் என ஹமாஸ் அமைப்பு கூறியுள்ளது.

அமெரிக்கா, எகிப்து மற்றும் கட்டார் ஆகிய நாடுகள் மேற்கொண்ட மத்தியஸ்த பேச்சுவார்த்தையின் பலனாக இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது.

இதன் அடிப்படையில் இஸ்ரேல் பணயக்கைதிகள் மற்றும் பாலஸ்தீனிய பணயக்கைதிகள் பரஸ்பரம் விடுவிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில், அமெரிக்காவின் ஓவல் அலுவலகத்தில் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், காசாவில் தடுத்து வைக்கப் பட்டுள்ள பணய கைதிகள் அனைவரும் எதிர்வரும் சனிக்கிழமை நண்பகலிற்குள் விடுதலை செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

மேலும் இவ்வாறு குறித்த காலப் பகுதிக்குள் விடுவிக்கப்படவில்லை எனில் போர்நிறுத்த ஒப்பந்தத்தை இரத்து செய்து விடுதாக அமெரிக்க ஜனாதிபதி எச்சரிக்கை விடுத்தார்.

காசாவில் இருந்து புலம்பெயர்ந்து வரும் அகதிகளை ஜோர்தான் மற்றும் எகிப்து நாடுகள் ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் அவர்கள் இதனை ஏற்கவில்லை என்றால், அந்த நாடுகளுக்கான உதவியை நிறுத்தி வைக்க நேரிடும் என்றும் கூறினார்.

அவருடைய இந்த கருத்துக்கு ஹமாஸ் அமைப்பு பதிலடி கொடுத்துள்ளது. ஹமாஸ் அமைப்பின் மூத்த செய்தி தொடர்பாளர் சமி அபு ஜூரி அளித்துள்ள பதிலில், மிரட்டல் விடுப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை எனக் கூறியுள்ளார்.

ட்ரம்பின் கருத்துகள், போர் முடிவுக்கு வருவதற்கான பேச்சுவார்த்தைகளைக் கடினம் ஆக்குவதற்கு வழி வகுப்பதாக அவர் குறிப்பிட்டுள் ளார்.

போர் நிறுத்த ஒப்பந்தம் என ஒன்று உள்ளதாகவும் அதற்கு இரு தரப்பினரும் மதிப்பளிக்க வேண்டும் எனவும் ஹமாஸ் அமைப்பின் மூத்த செய்தி தொடர்பாளர் சமி அபு ஜூரி வலியுறுத்தியுள்ளார்.

# அமெரிக்க ஜனாதிபதியின் அறிக்கை நகைப்புக்குரியது; வட கொரிய தலைவர்

காசா பகுதியைத் தனது நாடு ஆக்கிரமிக்கும் என்ற அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் அறிக்கை நகைப்புக்குரியது என்று வட கொரிய தலைவர் கிம் ஜாங் உன் தெரிவித்துள்ளார்.

இந்த திட்டம் பாலஸ்தீனத்தின் பாதுகாப்பு மற்றும் அமைதிக்கான நம்பிக்கைகளைச் சிதைப்பதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஜோர்டான் மன்னர் அப்துல்லாவைச் சந்தித்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் , தனது நாடு விரைவில் காசா பகுதியை ஆக்கிரமிக்கும் என்றும் கூறினார்.

இருப்பினும், ஜோர்டான் அமெரிக்காவின் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளது.



# குவாத்தமாலா பஸ் விபத்தில் 55 பேர் பலி; 70 பேர் காயம்

குவாத்தமாலாவில் ஏற்பட்ட பஸ் விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 55 ஆக அதிகரித்துள்ளது .

கடந்த 10 ஆம் திகதி குவாத்தமாலாவில் பஸ் ஒன்று பாலத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

பஸ்ஸில் 70 இற்கும் மேற்பட்டவர்கள் பயணித்தனர் என தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் காயமடைந்து வைத்தியசாலை யில் அனுமதிக்கப் பட்டவர்களில் 4 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.



பக்கம் 03

கனடா முரசு

புதன்கிழமை 12/02/2025

## கனடிய பிரதமர் பிரான்ஸுக்கு விஜயம்

கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பிரான்ஸுக்கு விஜயம் செய்துள்ளார்.

செயற்கை நுண்ணறிவு குறித்த சர்வதேச மாநாட்டில் பங்கேற்பதற்காக அவர் பிரான்ஸுற்கு 02▶



# அமெரிக்கா மீது கூடுதல் வரி விதித்தால் பதிலுக்கு அதே அளவு வரி விதிப்போம்

## ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவிப்பு

**அமெரிக்கா மீது கூடுதல் வரி விதித்தால் அதே அளவு வரியை மற்ற நாடுகள் மீதும் விதிப்போம் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

**அமெரிக்கா ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவி ஏற்றதில் இருந்து பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.**

கடந்த வாரம் அமெரிக்காவில் சட்ட விரோதமாக குடியேறிய இந்தியர்களை அடையாளம் கண்டு, இந்தியாவுக்கு நாடு கடத்தினார்.

இந்த விவகாரம் முடிவதற்குள் வெளிநாடுகளில் இருந்து அமெரிக்காவிற்குள் இறக்குமதி செய்யப்படும் ஸ்டீல் மற்றும் அலுமினியத்துக்கு 25 விழுக்காடு கூடுதல் வரி விதிக்கப்படுவதாக அறிவித்த ட்ரம்ப் இந்த புதிய வரி திங்கள் கிழமை முதல் நடைமுறைக்கு வரும் என தெரிவித்தார்.

இந்தநிலையில். எந்த நாடு தங்கள் மீது கூடுதல் வரி விதித்தாலும் அந்த நாடுகள் மீது அமெரிக்கா அதே அளவு வரி விதிக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மற்ற நாடுகளில் கார்கள் மீதான வரி அதிகம் உள்ள நிலையில் அமெரிக்காவில் கார்கள் மீதான வரி வெறும் இரண்டரை விழுக்காடு மட்டுமே என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தநிலையில், பதில் வரி முறையை நடைமுறைப்படுத்துவது குறித்தும் ட்ரம்ப் இறுதி முடிவு எடுக்க இருக்கிறார் என தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஒட்டாவாவில் வீடற்றவர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

கனடாவின் ஒட்டாவாவில் வீடற்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஒக்டோபர் மாதத்தில் வீடற்றவர்களின் எண்ணிக்கை 2952 ஆக காணப்பட்டது என தெரிவிக்கப்படுகிறது.

இது 2021 ஆம் ஆண்டில் 2612 ஆகவும் 2018 ஆம் ஆண்டில் 1654 ஆகவும் காணப்பட்டது.

அதிக எண்ணிக்கையிலானவர்கள் 25 முதல் 49 வயது வரையிலானவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

வீடற்றவர்களில் அதிக எண்ணிக்கையிலானவர்கள் குடியேறிகள் மற்றும் அகதிகள் என தெரிவிக்கப்படுகிறது.



அநேகமான வீடற்றவர்கள் வீதிகளில் உறங்குகின்றனர் எனவும் இது ஆபத்தானது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




# ஒன்றாரியோவில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் பலி

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவரும் கொல்லப்பட்டுள்ளனர்.

மூன்று வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

80 வயதான ஆண் ஒருவரும், 77 வயதான பெண்ணும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் இருவரும் ஒன்றாரியோவின் மிட்லாண்ட் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இருவரும் உறவினர்களா என்பது பற்றிய விவரங்கள் வெளியிடப்படவில்லை. இந்த விபத்து தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்தில் காயமடைந்த மேலும் இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.





## கனடிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஜயம் செய்துள்ளார்.

சர்வதேச செயற்கை நுண்ணறிவு குறித்த மாநாடு பிரான்ஸின் பாரிஸ் நகரில் நடைபெறுகின்றது.

அமெரிக்க அரசாங்கம் கனடாவின் உலோக உற்பத்திகள் மீது 25 வீத வரி விதிக்கப்படக்கூடிய சூழ்நிலையில் இந்த விஜயம் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்க உள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.



# ஸ்டீல், அலுமினியம் மீது 25 சதவிகித வரி விதிப்பு

## அறிவிப்பை வெளியிடவுள்ளனர் ட்ரம்ப்

அமெரிக்காவிற்கு இறக்குமதி செய்யப்படும் ஸ்டீல் மற்றும் அலுமினியம் மீது 25 சதவிகித வரி விதிக்க இருப்பது தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவிப் பொன்றை வெளியிடவுள்ளதாக அந் நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதனடிப்படையில், கனடா, மெக்சிகோ உட்பட பல நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது வரி விதிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்றதும், கனடா மற்றும் மெக்சிகோ முதலான நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது 25 சதவிகித வரி விதிக்க இருப்பதாக ட்ரம்ப் தெரிவித்திருந்தார்.

இதையடுத்து, 30 நாள்களுக்கு வரிவிதிப்பைத் தள்ளிவைப்பதாக அவர் அறிவித்திருந்தார்.

இந்தநிலையில், தற்போது மீண்டும் கனடா மற்றும் மெக்சிகோ உட்பட எந்தெந்த நாடுகளிலிருந்தெல்லாம் ஸ்டீல் மற்றும் அலுமியம் இறக்குமதி செய்யப்படுகிறதோ அந்த நாடுகள் மீதெல்லாம் 25 சதவிகித வரி விதிக்கப்போவதாக ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இது குறித்த அறிவிப்பு விரைவில் வெளியாகும் என எதிர்ப்பார்க்கபடுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில், கனேடிய ஸ்டீல் தயாரிப்பாளர்கள் கூட்டமைப்பின் தலைவரான கேத்தரின், ட்ரம்ப் கூறுவது போல் வரிவிதிக்கப்படுமானால் அது அழிவுகரமான விடயமாக அமைவதுடன், இரண்டு நாடுகளுக்கும் சவாலான விடயமாகவும் அமையும் என சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு, இந்த வரிவிதிப்பிலிருந்து கனடா வரிவிதிப்பு கோரவேண்டும் என்று கூறியுள்ள அவர், அப்படி கனடாவுக்கு விலக்கு அளிக்கப்படவில்லையானால் பழிக்குப் பழியாக அமெரிக்காவுக்கு வரிகள் மூலம் கனடா பலமாக பதிலடி கொடுக்க வேண்டியது மிகவும் அவசியமாகும் எனவும் தெரிவித்துள்ளார்.





# கனடாவில் சளிக் காய்ச்சல் நோயாளர்கள் அதிகரிப்பு

கனடாவில் சளி காய்ச்சல் நோய் தொடர்பில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டில் காணப்பட்டதை விடவும் இந்த ஆண்டில் சளிக்-காய்ச்சல் நோயாளர் எண்ணிக்கை அதிகம் என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் சளிக் காய்ச்சல் நோய் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் 21 வீதமானவர்கள் நோயினால் பாதிக்கப்பட்டிருந்தனர் என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டில் இந்த எண்ணிக்கை 18 வீதமாக காணப்பட்டது என தெரிவிக்கப்படுகிறது.

65 வயதிற்கும் மேற்பட்டவர்களுக்கு அதிக அளவில் இருந்த சளி காய்ச்சல் நோய் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒரு லட்சம் சனத்தொகையில் 2.4 பேர் வைத்தியசாலையில் வாராந்தம் அனுமதிக்கப்படும் நிலை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

டொரன்டோ பகுதியில் அதிகளவான சளி காய்ச்சல் நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.